ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
අති විශෙෂ
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
அதி விசேஷமானது

අංක 1834/23 - 2013 ඔක්තෝබර් මස 30 වැනි බදාදා - 2013.10.30
*1834/23 ஆம் இலக்கம் - 2013 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 30 ஆந் திகதி புதன்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி IV (ஆ) - உள்ளூராட்சி

## உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்ட அறிவித்தல்கள்

### (262 ஆம் அத்தியாயமான) உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் 65 அ (2) என்னும் பிரிவின் கீழ் உடுபத்தாவ பிரதேச சபையின் உறுப்பினரொருவரின் பதவியிலான வெற்றிடத்தை நிரப்புதல்

உடுபத்தாவ பிரதேச சபையின் உறுப்பினரொருவரின் பதவி, கட்சி உறுப்புரிமை இல்லாதொழிந்தமை காரணமாக வெற்றிடமாகியிருக்கின்றதாதலாலும் ;

கொரனீஸ் த கோரலயலாகே சஞ்ஜீவ பிரசன்ன குமார எனும் உறுப்பினர் சேர்ந்திருந்த அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சியான ஐக்கிய தேசியக் கட்சியின் செயலாளர், முப்பது (30) நாட்கள் காலப்பகுதிக்குள் உறுப்பினரொருவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டு வெளிப்படுத்தப்பட வேண்டிய அக்கட்சியைச் சேர்ந்தவரும், உடுபத்தாவ பிரதேச சபையின் உறுப்பினரொருவராகத் தேர்ந்தெடுக்கப்படுவதற்குக் கட்டளைச் சட்டத்தின் கீழ் தகுதியுடையவருமான ஆளொருவரைப் பெயர் குறிப்பதற்கு மேற்கூறப்பட்ட கட்டளைச் சட்டத்தின் 65 அ (2) என்னும் பிரிவின் கீழ் என்னால் பணிக்கப்பட்டுள்ளாராதலாலும் ;

மேலே கூறப்பட்ட அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சியின் செயலாளர், அத்தகைய வெற்றிடத்தை நிரப்புவதற்காக மேலே சொல்லப்பட்ட கட்டளைச் சட்டத்தின் கீழ் தகுதியுள்ள ஆளொருவராக திரு. கொரனீஸ் த கோரலயலாகே சஞ்ஜீவ பிரசன்ன குமார என்பவரைப் பெயர் குறித்து நியமித்துள்ளாராதலாலும் ;

இப்போது உடுபத்தாவ பிரதேச சபையின் தெரிவத்தாட்சி அலுவலர் தலங்கம அப்புஹாமிலாகே சமிந்த நாமல் தலங்கம ஆகிய நான், (262 ஆம் அத்தியாயமான) உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் 65 அ (2) என்னும் பிரிவின் நியதிகளின்படி செயற்பட்டு, திரு. கொரனீஸ் த கோரலயலாகே சஞ்ஜீவ பிரசன்ன குமார என்பவர், உடுபத்தாவ பிரதேச சபையின் உறுப்பினரொருவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளதாக இத்தால் வெளிப்படுத்துகின்றேன்.

டீ. ஏ. சீ. என். தலங்கம,
தெரிவத்தாட்சி அலுவலர்,
உடுபத்தாவ பிரதேச சபை.

தேர்தல்கள் அலுவலகம்,
குருநாகல்,
2013, ஒற்றோபர் 21.

11 - 468

**(262 ஆம் அத்தியாயமான) உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் 65 அ (2) என்னும் பிரிவின் கீழ் வேலணை பிரதேச சபையின் உறுப்பினரொருவரின் பதவியிலான வெற்றிடத்தை நிரப்புதல்**

அனுமதிபெறாது மூன்றுமாத காலமொன்றுக்கு சபையின் கூட்டங்களுக்கு சமுகமளியாமை காரணமாக வேலணை பிரதேச சபையின் உறுப்பினரொருவரின் பதவி, வெற்றிடமாகியிருக்கின்றதாதலாலும் ;

சோதிலிங்கம் கோபிலக்சன் என்னும் உறுப்பினர் சேர்ந்திருந்த அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சியான ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் செயலாளர், முப்பது (30) நாட்கள் காலப்பகுதிக்குள் உறுப்பினரொருவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டு வெளிப்படுத்தப்பட வேண்டிய அக்கட்சியைச் சேர்ந்தவரும், வேலணை பிரதேச சபையின் உறுப்பினரொருவராகத் தேர்ந்தெடுக்கப்படுவதற்குக் கட்டளைச் சட்டத்தின் கீழ் தகுதியுடையவருமான ஆளொருவரைப் பெயர் குறிப்பதற்கு மேற்கூறப்பட்ட கட்டளைச் சட்டத்தின் 65 அ (2) என்னும் பிரிவின் கீழ் என்னால் பணிக்கப்பட்டுள்ளாராதலாலும் ;

மேலே கூறப்பட்ட அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சியின் செயலாளர், குறிப்பிட்ட காலத்தில் தனது முடிவைத் தெரிவிக்காததாலும்;

இப்போது வேலணை பிரதேச சபையின் தெரிவத்தாட்சி அலுவலர் சிவசுப்பிரமணியம் அச்சுதன் ஆகிய நான், (262 ஆம் அத்தியாயமான) உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் 65 அ (2) என்னும் பிரிவின் நியதிகளின்படி செயற்பட்டு, 2011, யூலை மாதம் 23 ஆந் திகதி வேலணை பிரதேச சபைக்காக நடாத்தப்பட்ட தேர்தலில் தேர்ந்தெடுக்கப்பட்ட கடைசி உறுப்பினருக்கு அடுத்ததாக அதிகப்படியான விருப்பு வாக்குகளைப் பெற்றுள்ள திரு. கயிலாசபிள்ளை ஸ்ரீஸ்காந்தன் என்பவர், அவ்வெற்றிடம் ஏற்பட்ட வேலணை பிரதேச சபையின் உறுப்பினரொருவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளதாக இத்தால் வெளிப்படுத்துகின்றேன்.

எஸ். அச்சுதன்,
தெரிவத்தாட்சி அலுவலர்,
வேலணை பிரதேச சபை.

மாவட்ட தேர்தல்கள் அலுவலகம்,
யாழ்ப்பாணம்,
2013, ஒற்றோபர் 22.

11 - 469

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.